செ.வெ.எண்.346/2009/செமதொஅ நாள்:13.10.2009

**<u>தீ விபத்தில்லா தீபாவளி கொண்டாடுவது குறித்த விழிப்புணர்வு மோட்டார் சைக்கிள் பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.</u>**

காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை இயங்கி வருகிறது. அந்த துறையின் சார்பாக தீ விபத்தில்லா தீபாவளி கொண்டாடுவது குறித்த விழிப்புணர்வினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். பின்னர் தீயணைப்புத்துறையின் தீவிபத்து குறித்த புகைப்படங்கள் அடங்கிய கார்டூன் ப்ளக்ஸ் போர்டினை வெளியிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தீபாவளி பண்டிகை பெருமகிழ்ச்சி, பாதுகாப்புடன் பட்டாசு வெடிக்க ஒரு பயிற்சி மற்றும் தீபாவளி கொண்டாட்டத்தின் மகிழ்ச்சி உங்கள் கையில் என்ற கைபிரதிகள் மற்றும் விபத்தில்லா தீபாவளிக்கு என்கிற ஸ்டிக்கர் ஆகியவற்றை வெளியிட்டார். மாவட்ட தீயணைப்பு அலுவலர் திரு. டேவிட் வின்சன்ட் அவர்கள் தலைமையில் மோட்டார் சைக்கிள் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த பேரணி நான்கு ராஜவீதி வழியாகவும், காமராஜர் தெரு, காந்தி ரோடு, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் வழியாக வட்டாட்சியர் அலுவலகத்தை வந்தடைந்தது. தீயணைப்புத்துறை வாகனத்தின் மூலம் தீபாவளி பண்டிகை வரை தீபாவளி விழிப்புணர்வு குறித்து ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யப்படுகிறது. மேலும், இந்த விழிப்புணர்வு குறித்த கைப்பிரதிகள் மற்றும் ஸ்டிக்கர்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.